# கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனிக் கட்சி உதயமாகலாம்

மட்டக்களப்பு, ஆக 6

கிழக்குமாகாண முஸ்லிம் அரசியல்வாதிகளை உள்ளடக்கிய தனியான அரசியல் கட்சி ஒன்று விரைவில் உதயமாகலாமென விஷயமறிந்த முஸ்லிம் அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இம்மாகாண முஸ்லிம்களின் தனித்துவம், தமிழ் மக்களுடன் இணைந்து செயல்படல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த அரசியல் கட்சி உதயமாகவுள்ளது.

அண்மையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் இம்மாகாண முஸ்லிம்களின் பிரச்சினை கொழும்பு தலைவர்களால் வைக்கப்பட்டதே தவிர இம்மாகாண முஸ்லிம்களால் வைக்கப்படவில்லை என்ற கருத்தும் பெரும்பாலான முஸ்லிம்கள் மத்தியில் நிலவுவதாகக் கூறப்படுகிறது.

இம்மாகாண முஸ்லிம் அரசியல் வாதிகள் சிலர் மாவட்ட அடிப்படையில் சென்று தமிழ்த்தலைவர்களையும் சந்தித்தும் கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள்.

இனப்பிரச்சினைக்கு எத்தவொரு தீர்வுவந்தாலும் இம்மாகாண முஸ்லிம்கள் தமிழருடன் இணைந்து வாழவேண்டுமென்ற கருத்து தற்போது முஸ்லிம் அரசியல் வட்டாரங்களில் பரவலாக நிலவுகின்றது. (இ-11)

## 5 ஆசிரியர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஆக. 6

பருத்தித்துறை கிழக்குப் பகுதியிலுள்ள கஷ்டப் பிரதேசங்களாகிய தாளையடி, உடுத்துறை நாகர்கோவில், செம்பியன்பற்று பாடசாலைகளுக்கு புதிய ஆசிரியர்கள் 5 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்களின் நலன் கருதி இவர்கள் இக் கிராமங்களின் மத்தியிலே சென்று படிப்பிக்கின்றனர் என்று கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார். (இ-5)

# பண்டாரநாயக்காவின் கருத்து ஏற்கப்பட்டிருந்தால் இன்று இரத்தக் களரிக்கு இடமில்லை

கரவெட்டி, ஆக. 6

திரு எஸ். டபிள்யு. ஆர் டி. பண்டாரநாயக்கா, முற்போக்கு எண்ணம் படைத்தவராக இருந்த காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழும் இந் நாட்டில் ஒரு சமஷ்டி அமைப்பே சிறந்தது என்று கூறி இருந்தார். இக்கருத்து ஏற்கப்பட்டு நடைமுறைப் படுத்தப் பட்டிருந்தால் இன்று இந்நாட்டில் இனப்பிரச்சினைக்கோ இரத்தக் களரிக்கோ இடம் ஏற்பட்டிருக்க முடியாது.

வதிரி தமிழ் மன்ற இளைஞர் கழகமும், அறவழிப் போராட்டக் குழுவும் இணைந்து நடத்திய கருத்தரங்கில் உரையாற்றிய சட்டத்தரணி திரு வி. மகாலிங்கம் இப்படிக் கூறினார்.

செல்வி ஏ. சூரியகலா தலைமையில் வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. மகாலிங்கம் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் கூறியதாவது:-

அரசியல் துறையில் தலைமை வகிப்போர் பொது மக்களின் சேவைக்கு தங்களை அர்ப்பணிப்பவர் ஆவர்.

மக்களின் எஜமானர்கள் என்று கருதாது தாமும் மக்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்களே என கருதவேண்டும் என மாமேதை லெனினுடைய வாழ்க்கை சுட்டிக்காட்டுகிறது.

மேலும் ஓர் அரசியல் சித்தாந்தத்தை கொண்டவர்கள் மக்களை அதிகாரம் பின்தங்க விடாது தம்முடன் கொண்டுசெல்ல வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

சட்டத்தரணி திரு. எம். கே. முத்துக்குமார், தேசிய இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளர் ஆகியோரும் உரையாற்றினர்.

செல்வி சிலம்புச்செல்வி நன்றி கூறினர். (இ-70)

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### முல்லைத்தீவில் தஞ்சமடைந்துள்ள

# 1500 தமிழ்க் குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்புகள்

யாழ்ப்பாணம், ஆக 6

முல்லைத்தீவு மாவட்டத்தில் தஞ்சம் புகுந்துள்ள திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 1500 தமிழ்க் குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்பு அளிக்கும் திட்டம் ஒன்றை பரிசீலனை செய்ய தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் விருப்பம் தெரிவித்துள்ளது.

கழகத்தின் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி இவ்விருப்பத்தை முல்லைத்தீவு பிரஜைகள் குழு, திருமலை இடம் பெயர்ந்தோர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழுவிடம் தெரிவித்தார்;

அரச நிவாரண உதவிகளும் இந்த அகதிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளன எனவே புனர்வாழ்வுக் கழகம் தொழில் வழங்கும் திட்டம் ஒன்றை செயல்படுத்த முன்வர வேண்டும் — இப்படி தூதுக்குழு எதிர்பார்ப்பில் கேட்டுக் கொண்டது.

அப்படியான திட்டம் ஒன்றைத் தயாரித்துத் தந்தால் அதைப் பரிசீலனை செய்து செயல்படுத்த கழகம் தயாராக இருப்பதாக பேராசிரியர் சிவத்தம்பி சொன்னார். (இ-எ)

## ஓய்வு பெறும் அதிபர் காலம்

# கல்லூரி வரலாற்றில் பொற்காலம் ஆகும்

### பாராட்டு விழாவில் உரை

பண்டத்தரிப்பு, ஆக 6

பண்டத்தரிப்பு உயர்தர மகளிர் கல்லூரியின் வரலாற்றில் ஓய்வுபெறும் அதிபர் திருமதி ஆறுமுகதாசனின் காலம் பொற்காலம் ஆகும்.

இவ்வாறு மகளிர் கல்லூரி உப அதிபர் திருமதி சுப்பிரமணியம் கூறினார்.

கல்லூரியின் மாணவியரும், ஆசிரிய ஆசிரியைகளும் சேர்ந்து நடத்திய சேவை நலம் பாராட்டு விழாவுக்குத் தலைமை வகித்த அவர் உரையாற்றினார்.

உப அதிபர் மேலும் பேசுகையில், திருமதி ஆறுமுகதாசன் நிருவாகத் திறமைமிக்க அதிபர். பிள்ளைகளின் ஒழுக்க விடயத்தில் மிகக் கண்டிப்பாக இருப்பார். அதேவேளை பிள்ளைகளின் பிறவிடயங்களை அனுதாபத்துடன் அணுகி அவர்களுக்கு உதவுவார். இப்படியான ஒரு சிறந்த அதிபர் இன்றைய காலகட்டத்தில் ஓய்வு பெறுவது துயரந்தருகின்றது என்று கூறினார்.

யாழ்ப்பாண கல்வித் திணைக்கள பிரதான கல்வி அதிகாரிகளில் ஒருவரான திரு. க. சோமசுந்தரம் பாராட்டுரை வழங்குகையில், அதிபரது அயராமுயற்சி இருமாடிக் கட்டடத்தை அமைப்பதிலும் சிறந்த வெளிக்கலையரங்கு, உயர்தர வகுப்புகள் ஆகியவற்றை ஆரம்பிப்பதிலும் வெற்றியீட்டியுள்ளது என்றார்.

சங்கீத ஆசிரியை சரஸ்வதி கோபாலசாமி வாழ்த்துமடலை வாசித்தளித்தார்.

திருமதி ஆறுமுகதாசன் தனது பதிலுரையில், இந்தக் கல்லூரி சந்ததி சந்ததியாக நல்ல கல்விப் பணி ஆற்ற வேண்டுமானால் மாணவ, மாணவிகள் வாழ்நாள் முழுவதும் கல்லூரியுடனான தொடர்பை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கல்வியால் உயர்ந்த தமிழ் இனம் தமது உழைப்பில் ஒருபகுதியை என்றும் கல்வி வளர்ச்சிக்கு தியாகம் செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார். (இ-121)


## எங்கள் சேவை

### தவறிவிட்டது

பெரியவிளான் இளவாலையைச் சேர்ந்த ஜெயரட்ணம் ஸ்ரீரஞ்ஜன் ஆகிய எனது பாஸ்போட்டும் எனது பெயரில் உள்ள காசோலையும் நேற்றுப் பகல் 11 மணியளவில் இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளைக்கும் வெலிங்டன் தியேட்டருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து மேற்படி விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

### காணவில்லை

கு. அசோகன், குமரபுரம், பரந்தன் ஆகிய எனது அடையாள அட்டை காணாமல் போய் விட்டது. கண்டெடுத்தோர் யாழ். பஸ் நிலையத்தில் இருக்கும் கணேசன் கூல் பாரில் ஒப்படைக்கும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

### BOOKS

Sri Lankan Legitimacy Over North & East by Somasundaram Vanniasingham Price Rs. 30/- at all Book stalls.


## விளையாட்டு போட்டிகளால் ஆற்றல் வளரும்

வட்டுக்கோட்டை, ஆக 6

மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் ஒழுக்க நெறிகளைக் கற்றுக் கொள்கின்றனர். விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவோரின் உடல் உறுதியடைவதோடு ஆற்றல்களும் விருத்தியடைகின்றன. இப்பாடசாலைக்கு ஒரு விளையாட்டு மைதானம் இல்லாதபோதும் மிகச் சிறப்பான முறையில் விளையாட்டுப் போட்டி நடத்துவது குறித்து பாராட்டுகின்றேன்.

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டை தொகுதி நிர்வாக அதிகாரி திரு. நா. வேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

வட்டு சிவன் இந்து சமய அபிவிருத்திச் சங்க விளையாட்டு மைதானத்தில் வித்தியாலய அதிபர் திரு. இ. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு ப. சண்முகராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (அ-161)

# வெற்றி தோல்விகளை ஏற்கும் மனப்பக்குவம் ஏற்பட வேண்டும்

பண்டத்தரிப்பு, ஆக.6

வெற்றி தோல்விகளை அதிர்ச்சி இன்றி ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவத்தை ஏற்படுத்தவும், வாழ்க்கைப் பிரச்சினைகளை முகம் கொடுத்து சமாளிக்கும் ஆற்றலை வளர்க்கவும் பாலர் பாடசாலையிலிருந்தே சிறுவர் சிறுமியர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்வது அவசியம்.

சில்லாலை தெற்கு சென் ஜேம்ஸ் கிராம அபிவிருத்தி சங்க பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பிரதம நடுவராக கலந்துரையாற்றிய சங்கானை அடக்கு சமாதான சபைத் தலைவரும், வடலியடைப்பு சைவப் பிரகாச வித்தியாசாலை அதிபருமான க. சரவணலிங்கம் இவ்வாறு கூறினார்.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு ஜி. பங்கிராஸ் தலைமையில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

சில்லாலை பங்குத் தந்தை வணக்கத்திற்குரிய இருதயதாஸ் அடிகள் பிரதம விருந்தினராக கலந்து ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிக் கொடுத்தும், பாலர் பாடசாலை கொடியை ஏற்றியும் விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

இருதயதாஸ் அடிகள் தமது உரையில், பாலர் உள்ளம் கள்ளம் கபடமற்றது. தெய்வீக ஒளி வீசுவது. இவர்கள் ஒன்றுகூடி நட்புறவுடன் பழகுவதும் செயல்படுவதும் ஐக்கிய வாழ்விற்கும், சகோதர நேச வளர்ச்சிக்கும் உதவும் என்றார்.

பாலர் பாடசாலை ஆசிரியை புஞ்சிறன்ஸ் இமானுவேல் ஆரம்ப உரையை அடுத்து கொடியேற்றி வைக்கப்பட்டது.

சில்லாலை அன்னையர் குழுத் தலைவி திருமதி லெயிற்று யேசுதாசன் தமது உரையில் ஆண்களும் பெண்களும் ஒழுக்கமும் வீரமும் மிக்கவர்களாகத்திகழ வேண்டும். அப்போது தான் இன்றைய நெருக்கடியில் இனப்பாதுகாப்பு நடவடிக்கைகளை தீரமுடன் செய்ய முடியும் என்றார். (இ-120)

## இன்று இறுதி நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் ஆக 6

,,நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவின் வளர்ந்தோர் உணவுப் போஷாக்குப் பயிற்சி நெறி' கருத்தரங்கின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் இன்று நடைபெற, உள்ளன.

திட்டம் செயல்படுத்தும் அமைச்சின் அனுசரணையுடன் இக் கருத்தரங்கு கடந்த இருவாரங்களாக நடைபெற்று வருகின்றது.

இறுதி நாள் நிகழ்ச்சிகள் இன்று காலை திருநெல்வேலி விவசாயப் பயிற்சி கல்லூரி மண்டபத்தில் திரு கே. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும்.

திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி. ச. கணேந்திரன், உதவி அரசாங்க அதிபர் கே. கோபாலரத்தினம், கலாநிதி க. மோகனதாஸ் உட்பட பலர் சிறப்புரை ஆற்றுவார்கள். (இ-5)

# இளம் பராயத்தில் ஊட்டப்படும் சத்துணவே அதிக பலன் அளிக்கிறது

யாழ்ப்பாணம், ஆக 6

ஒவ்வொரு மனிதனும் சுகாதாரத்துடனும், திடகாத்திரத்துடனும், மூளை வலுவுடனும் இறுதி வரை வாழ்வதற்கு இளமையில் ஊட்டப்படும் சத்துணவே காரணமாக அமைகின்றது.

இணுவில் "சத்துணவுக் குறை நிறைவு" நிலைய அங்குரார்ப்பண வைபவத்தில் உரையாற்றிய றெட்பாணா ஸ்தாபனப் பிரதிநிதி திரு. எஸ். சோதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

றெட்பாணா, சிறுவர் பாதுகாப்பு நிதியம், சர்வோதயம், பொறாட் நிறுவனம் ஆகிய ஸ்தாபனங்கள் ஒன்றிணைந்து எஸ் ஆர். எஸ். என். என்ற பெயரில் சிறுவர்களுக்கான சத்துணவுத் திட்டமொன்றை உருவாக்கியுள்ளன.

சத்துணவுக் குறை நிறைவு நிலையம் என்ற பெயரில் கிராம மட்டத்தில் சத்துணவூட்டும் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன்தொடரில் இணுவில் கிராமத்தில் இந்த நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இணுவில் ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்ட மண்டபத்தில் இத்திட்டத்தின் தலைவரும், இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான திரு. தி. கி. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சிறுவர் பராமரிப்பு நிதியப் பிரதிநிதி திருமதி கைலாசபதி சிறுவர்களுக்கு சத்துணவை ஊட்டி சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

திரு எஸ் சேனாதிராசா, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. க. தங்கவேலாயுதம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தனர். (இ)

# பொதுப் பிரச்சினையில் பிரசைகள் குழுக்கள் இணைந்து செயற்பட வேண்டும்

கரவெட்டி, ஆக .6

பொது பிரச்சினைகள் எழும்போது வடமராட்சியில் உள்ள அனைத்து பிரசைகள் குழுக்களும் ஒன்று சேர்ந்து அவற்றைத் தீர்க்கவேண்டும்.

நெல்லியடி கல்வி அபிவிருத்தி மண்டபத்தில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை கிழக்குப் பிரதேசம், கரவெட்டி ஆகியவற்றின் பிரசைகள்குழு ஒன்றிய அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

பருத்தித்துறை பிரசைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் அதில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கரவெட்டி பிரசைகள் குழுத்தலைவர் சட்டத்தரணி திரு வி. மகாலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பேராசிரியர் கணேசலிங்கம் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், இடம் பெயர்ந்த மாணவரின் பரீட்சை, அகதிகள் புனர்வாழ்வு ஆகிய பொதுப்பிரச்சினைகளுக்கு வடமராட்சி பிரசைகள் குழுக்கள் ஒன்றிணைந்து தீர்வுகாண வேண்டும்.

'அகதிகளுக்கான உதவிகள், நிவாரணங்கள் பங்கீடு செய்யப்படுவதை பிரசைகள் குழுக்கள் மேற்பார்வை செய்ய வேண்டும்'

இப்படி அவர் கூறினார்.

பருத்தித்துறை கிழக்குப் பிரசைகள் குழுத் தலைவர் திரு சி ஏ. ஸ்ரனிஸ்லஸ் பேசுகையில்; பருத்தித்துறை தொடக்கம் பொன்னாலை வரை இராணுவமுகாம்களையும் சிங்களக் கிராமங்களையும் தவிர்த்து, தமிழ்க் கிராமங்களுக்கு செல்லும் பாதை ஒன்று நீண்டகாலமாக இருந்து வருகிறது.

அப்பாதையை செப்பனிட்டு பாவிக்க வேண்டும் என்றார்.

திரு. பகவத்சிங் பேசுகையில், 'சீரழிந்த நிர்வாகத்திற்குப் முண்டு கொடுப்பதற்காகவே அரசாங்கம் மாகாண சபைகள் என்னும் மாயையை மக்கள் முன் நிறுத்தியுள்ளது என்றார்.

சட்டத்தரணி திரு. எம். கே. முத்துக்குமார், வல்லை பிரசைகள் குழுத்தலைவர் திரு எஸ் திருநாவுக்கரசு, சாந்திதாசன், சஞ்சீவன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (இ-70)

## கருத்தரங்கு

சாவகச்சேரி, ஆக 6

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் பாடசாலை வளர்ச்சியில் பெற்றோர், நலன்விரும்பிகளின் பங்கு என்னும் விடயம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று அண்மையில் நடைபெற்றது. (இ-31)

# இலைமறை காயாக உள்ள கலைஞரை ஊக்குவிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், ஆக 6

தமிழ் இலக்கியம் வளர வேண்டும் என்று பலரும் இன்று சத்தமிடுகிறார்கள்- கருத்துச் சொல்லுகிறார்கள். ஆனால் இலைமறை காயாய் இருக்கும் எம் கலைஞர்களை அவர்கள் ஊக்குவிக்க முன்வருகிறார்களா?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் எழுத்தாளரான வளவை வளவன்.

'அறிவொளிக்கலை' கையெழுத்துப் பத்திரிகையின் நூறாவது இதழ் வெளியீட்டை ஒட்டி நடைபெற்ற விழாவிலேயே இவ்வாறு அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது;

இந்திய பாணியிலான, வக்கிர உணர்ச்சிகளை தூண்டிவிடும், கவர்ச்சி எழுத்திலே எமது வாசகர்களும், எழுத்தாளர்களும் பாதிப்புற்றுள்ளனர்.

கிராமங்களிலிருந்து வெளிவரும் கையெழுத்துப் பத்திரிகையிலேயே உண்மையான, யதார்த்த பூர்வமான, மண்வாசனையை காணமுடியும் என்றார்.

செம்பியன் செல்வன் பேசுகையில்; தொடர்ந்து 100 இதழ்களை-அதுவும் கையெழுத்து பத்திரிகையாக - வெளியிடுவது என்பது அசாத்தியமானதே.

இவ்வகையில் இச்சாதனை புரிந்த அரியாலை மேற்கு ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தினர் பாராட்டுதலுக்குரியவர்களே என்றார்.

இவ்விழா தற்போதைய இதழ் இணை ஆசிரியர் டாக்டர் ப. சசிதரன் தலைமையில் அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. (இ-5)


TOEFL

வெளிநாட்டுக் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் மேற்படிப்புக்களைத் தொடர விரும்புவோருக்கும் அந்நாடுகளில் வேலை வாய்ப்புக்களை எதிர்பார்ப்பவர்களுக்கும் TOEFL பரீட்சையில் திறமைச் சித்தி அவசியம்

FULL COURSE FEES: Rs. 250/-

SPOKEN ENGLISH

English is Caught rather than taught, and Me best way of learning English is to Speak it.

இரண்டு மாதத் துரிதப் பயிற்சி நெறி

ஆர்வமுள்ளோருக்கு அரிய சந்தர்ப்பம்!

வெளிநாடு செல்பவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்!!

Full Course Fees Rs. 100/- only

விரிவுரைகள்:

பிரபல ஆங்கில விரிவுரையாளர்

கந்தையா நவரேந்திரன்

Both Classes will be held during Weekends

COMMENCEMENT: 9-8-1986

வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில்

I.C.M.A.. A.A,T., I.D.P.M., I.A.B.. Computer-Programming, Radio & T.V. Engineering வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

CANTABIA INSTITUTE

21. MAIN STREET, JAFFNA.

T'Phone: 24201



பிரயாண ஒழுங்குகள்

★ ஹொலண்ட்

★ பெல்ஜியம்

★ பிரான்ஸ்

★ ஜேர்மன்

★ கனடா

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும் மற்றும்

பாஸ்போட், விசா, பொண்ட், (BOND) ரிக்கட் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ, (மகளிர் கல்லூரிக்கருகாமையில்) மானிப்பாய்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

என் கடமையை நான் செய்கிறேன் மற்ற எதுவும் எனக்கு லட்சியமில்லை.

— மார்க் அரேலியஸ்.

உதயன்

உண்மை - நேர்மை - நடுநிலைமை

இல 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
கிஸ்சாறு நிலை வீதி 22073
யாழ்ப்பாணம், 06-08-86 த பெ 23

## கலப்படம் போக்க புதிய அணுகுமுறை தேவை

உணவுப் பொருள்கள் கலப்படம் இல்லாதவையாக இருப்பது அவசியம். கலப்பட உணவால் மனித சுகாதாரம் கெட்டுப்போவதும் அதனைக் கருத்தில் கொண்டு வியாபாரிகள் தமது தொழிலைத் தூய்மையாகச் செய்ய வேண்டும். மக்கள், கலப்படமற்ற உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பாவனையாளர் சங்கங்கள் செயற்பட வேண்டும்.

உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் திரு. சி. த. மார்க்கண்டு சித்தன்கேணியில் நடந்த பயிற்சி நெறி வகுப்பில் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்ட கருத்தை வலியுறுத்தி உள்ளார்.

தரக்குறைவான உணவுப் பொருள்களாலும் கலப்படம் நிறைந்த உணவுப் பொருள்களாலும் உடலுக்குத் தீங்கு. இது எல்லோரும் அறிந்த உண்மை. எனினும் உணவுப் பொருள்களைத் தயாரிப்போரும், வியாபாரிகளும் தமது வருவாயைக் கருதி மனித விரோதச் செயல்களைச் செய்கின்றனர்.

தரக்குறைவான உணவுப் பொருள்களைத் தயாரிப்பதும் விற்பதும், பொருள்களில் கலப்படம் செய்வதும், கொள்ளை லாபம், பதுக்கல் ஆகியனவும் தண்டனைக்குரிய குற்றங்கள். எனினும் அவை இன்னமும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன.

அரசாங்க அதிகாரிகளால் அவற்றைத் தடுக்க முடியவில்லை. சில அதிகாரிகள் கண்டும் காணாமல் இருப்பதுண்டு. வேறு சில அதிகாரிகள் தமக்குக் கிடைக்கும் சில நன்மைகளைக் கருதி குற்றச் செயல்களுக்குத் துணை போவதும் உண்டு.

அதே வேளை குற்றங்களைக் கண்டுபிடிக்கப் போதிய தகவல்களும் அதிகாரிகளுக்கு கிடைப்பதில்லை. அதனால் தரக்குறைந்த உணவுப் பொருள், கலப்படம் ஆகிய குற்றச் செயல்களை முழுக்க முழுக்க போக்க முடியாத நிலைமை உள்ளது.

அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்காகத் தான் பாவனையாளர்கள் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. பிரஸ்தாப சங்கங்களில் பாவனையாளரே அங்கம் வகிப்பதால் அவர்களின் நலன் பாதுகாக்கப்படும் என எதிர்பார்க்கப் பட்டது.

சில இடங்களில் பாவனையாளர் சங்கங்கள் சரியாக இயங்கி நல்ல பலன்களைத் தந்தன. ஆனால் சில இடங்களில் அவை சித்தி அளிக்கவில்லை. பாவனையாளர் சங்கங்களில் உள்ள முக்கிய பிரமுகர்களில் சிலர் குற்றம் செய்பவர்களுக்குத் துணைபோயினர். சிலர் பாவனையாளர் நலனுக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை தமது சொந்த நலனுக்குக் கொடுத்ததும் உண்டு.

இவ்வாறான பல காரணங்களால் வடக்கில் என்று மட்டுமன்றி இலங்கை அளாவிய மட்டத்தில் பாவனையாளர் சங்கங்கள், எதிர்பார்த்ததைவிட மிகக் குறைவாகவே பாவனையாளர்களுக்குப் பயன்பட்டன.

பாவனையாளர் சங்கங்கள் நல்ல நோக்கத்துடன் நிறுவப்பட்ட போதிலும் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்று பொதுவாகக் குறை கூறப்படுகிறது. பல இடங்களில் அவை சரிவர இயங்குவதில்லை என்று முறையிடப்பட்டதும் உண்டு.

அவை உரியபடி இயங்கிப் பாவனையாளர்களுக்கு நன்மை புரிய வேண்டுமெனில் சொந்த நலனைவிட மக்கள் நலனில் அதிக அக்கறை உள்ளவர்களே முக்கிய பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட வேண்டும். அதாவது ஊழல் பேர்வழிகள் முக்கிய பதவிகளை கைப்பிடிக்காதிருப்பதை பாவனையாளர்களே நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பாவனையாளர் சங்கங்கள் சுறுசுறுப்பாக இயங்க வேண்டியதும் பிரதானம்.

குற்றம் புரிபவர்களை வெறும் தண்டனையால் திருத்தி விடுவது கஷ்டம். அவர்களின் மனதை மாற்றி நல்லவர்களாக்க வேண்டும். சீர்திருத்த வேண்டும்.

இது வியாபாரிகளுக்கும் பொருந்தும். அவர்களை அழைத்து கருத்தரங்குகள் வைக்க வேண்டும். கலப்படம், கொள்ளை லாபம், பதுக்கல் ஆகியவற்றால் சமூகத்துக்கு ஏற்படும் பாதிப்புகளை விளக்க வேண்டும். மக்கள் விரோதச் செயல்களைச் செய்வதை நிறுத்த வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்த வேண்டும். மொத்தத்தில் அவர்களை எதிரிகளாகப் பார்க்காமல், நண்பர்களாகக் கொண்டு நல்வழிப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

அதற்கும் வளையாதவர்களுக்கு மட்டுமே கடைசி ஆயுதமாகத் தண்டனையை வழங்க வேண்டும்.

இந்தப் புதிய அணுகுமுறையை பாவனையாளர் சங்கங்கள் மேற்கொண்டால் நல்ல பலன் கிடைக்கலாம். அதற்குக் கூட பாவனையாளர் சங்கங்கள் — அதன் நிர்வாகிகள் தூய்மையானவர்களாக — மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்களாக இருத்தல் மிக அவசியம்.

மொத்தத்தில் பாவனையாளர், அதிகாரிகள், வர்த்தகர்கள் முக்கூட்டு ஒத்துழைப்பின்றி, மனத்தூய்மை இன்றி அதிக பலன் எதுவும் கிடைக்கும் என்று கருதுவதற்கு இல்லை.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில்

# தென்னாபிரிக்கா மீது தடை விதிக்க பிரிட்டன் தயார்

## தட்சர் அறிவிப்பு

லண்டன், ஆக. 5

தென் ஆபிரிக்கா மீது சில தடைகளை விதிக்கப் போவதாக பிரிட்டன் தானாகவே முன் வந்து அறிவித்திருக்கிறது.

சிறிய அளவிலான காமன்வெல்த் மாநாட்டின் முடிவில் பிரிட்டிஷ் பிரதமர் மார்கரெட் தட்சர் செய்தியாளரிடம் இதனை வெளியிட்டார்.

தென் ஆபிரிக்காவில் புதிய முதலீடுகள் செய்வதை நிறுத்துதல் — உல்லாசப் பிரயாண செய்தித் தொடர்புகளைக் கட்டுப்படுத்துதல் ஆகியன அந்தத் தடைகளாக இருக்கும் என்று பிரதமர் மேலும் சொன்னார்.

இரும்பு, நிலக்கரி, எஃகுப் பொருள்கள், தங்கம் ஆகியவற்றை தென் ஆபிரிக்காவிடமிருந்து பெற்றுக் கொள்ளுவதைத் தடைசெய்ய ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் முன்வந்தால் பிரிட்டனும் அந்த நாடுகளுடன் சேர்ந்து கொள்ளும்.

—இப்படி பிரதமர் மார்கரெட் தட்சர் சொன்னார்.



### வெளி உலகில்

உலகின் ஏனைய பாகங்களில் நடக்கும் சம்பவங்களில் இருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ள முடியாத சூழ்நிலை பிரிட்டனுக்கு ஏற்படும் என்று ஆஸ்திரேலியப் பிரதமர் பொப் ஹோக் தான் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார். (உ-எ)

## புதிய தடைகளை விதிக்க ஏனைய நாடுகள் முடிவு

லண்டன், ஆக. 5

தென் ஆபிரிக்கா மீது ஏற்கனவே விதிக்கப்பட்ட தடைகளுடன் புதிய பொருளாதாரத் தடைகளை விதிப்பது என்று லண்டனில் நடந்த சிறிய அளவிலான காமன்வெல்த் உச்சி மாநாடு ஏகமனதாகத் தீர்மானித்தது.

அதே நேரத்தில் தானாக முன்வந்து குறிப்பிட்ட அளவு தடைகளை விதிக்க பிரிட்டனை அனுமதிப்பது என்றும் இம் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தச் சிறிய அளவிலான உச்சி மாநாட்டில் இந்தியா, கனடா, ஆஸ்திரேலியா, ஸாம்பியா, சிம்பாப்வே, பஹாமாஸ், பிரிட்டன் ஆகிய ஏழு நாடுகள் கலந்துகொண்டன.

தென் ஆபிரிக்கா மீது பொருளாதாரத் தடை விதிப்பது சம்பந்தமாக நாஸோ மாநாட்டில் எடுக்கப்பட்ட 8 அம்ச உடன்பாட்டைத் தொடர்ந்து அமுல் நடத்துவது.

அதேநேரத்தில் புதிய தடைகளை விதிப்பது— இப்படி மாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விமானத் தொடர்பு நிறுத்தம், விவசாயப் பொருள்கள் கொள்வனவு, இரட்டை வரி விதிப்பு அமுல் நடத்தல் உட்பட 8 அம்சங்களைக் கொண்டது நாஸோ உடன்பாடு. (உ-எ)

## இஸ்ரவேல்— ரஷ்ய உறவு மீண்டும் உதயம்

மாஸ்கோ, ஆக 5

20 ஆண்டுகளின் பின்னர் இஸ்ரவேலுடன் ராஜதந்திரத் தொடர்புகளை புதுப்பிக்க ரஷ்யா முன்வந்துள்ளது.

ஆனால் மத்திய கிழக்கு சம்பந்தமான ரஷ்யாவின் கொள்கையில் மாற்றமில்லை.

— இப்படி ரஷ்யா அறிவித்துள்ளது.

1967 இல் இடம் பெற்ற ஆறுநாள் மத்திய கிழக்கு யுத்தத்தைத் தொடர்ந்து, ரஷ்யா இஸ்ரவேலுடனான ராஜதந்திரத் தொடர்புகளைத் துண்டித்திருந்தது.

புதுப்பிக்கப்படும் ராஜதந்திர உறவுகள் முதலில் ஆலோசகர் மட்டத்தில் அமையும்.

அதன் பின்னர் மத்திய கிழக்குக் கொள்கையில் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்தே, முழு அளவிலான ராஜதந்திரத் தொடர்புகள் குறித்து முடிவு எடுக்கப்படும்.

இப்படி மாஸ்கோவில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## ரஷ்ய- அமெரிக்க தலைவர்கள் சந்திப்பு

### செப்டம்பர் 20 இல் நடக்கும்

வாஷிங்டன், ஆக. 5

றேகன்— கோர்பச்சேவ் இரண்டாவது சந்திப்பு செப்டம்பர் 20இல் இடம் பெறலாம்.

இப்படி அமெரிக்க வெளிநாட்டமைச்சுத் திணைக்களம் அறிவித்தது.

இச்சந்திப்புக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பற்றி ஆராய அமெரிக்க வெளிநாட்டமைச்சர் ஜோர்ஜ் ஷூல்ட்ஸும் சோவியத் வெளிநாட்டமைச்சரும் அடுத்த மாதம் சந்தித்துப் பேசுவுள்ளனர் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

றேகன்—கோர்பச்சேவ் முதலாவது சந்திப்பு கடந்த ஆண்டு நடந்தது.

இரண்டாவது சந்திப்புக்கான ஏற்பாடுகள் நடைபெறும்சமயம்தான் அமெரிக்கா, லிபியாமீது விமானத் தாக்குதலை நடத்தியது. அதைத் தொடர்ந்து இந்த ஏற்பாடுகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டன.

மீண்டும் அடுத்த மாதம் இரண்டு அமைச்சர்களும் சந்திப்பதைத் தொடர்ந்து இரண்டாவது உச்சிமாநாட்டுக்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகும். (உ-எ)

## வெள்ளை மாளிகை தயார்

வாஷிங்டன், ஆக. 5

இஸ்ரவேல், எகிப்து, பாகிஸ்தான், அயர்லாந்து ஆகிய நாடுகளுக்கான அமெரிக்க உதவிகளை குறைக்கும் திட்டம் எதையும் அமெரிக்க காங்கிரஸ் அனுமதித்தால் அதை ரத்துச் செய்ய வெள்ளைமாளிகை தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## தென்பசுபிக் நாடுகளின் கூட்டம்

சிட்னி, ஆக 5

தென் பசுபிக் தீவான நியூகிலிடோனியாவின் வருங்காலத்தையும் அப்பகுதியில் சோவியத் ரஷ்யா காட்டும் அக்கறை பற்றியும் ஆராய்வதற்காக இந்த வாரம் தென்பசுபிக் நாடுகள் கூடுகின்றன.

13 தென் பசுபிக் நாடுகளில் ஆஸ்திரேலியாவும் நியூசிலந்தும் அடங்கியுள்ளன.

நான்கு நாள் மாநாடு வெள்ளி ஆரம்பமாகின்றது. (உ-எ)

## தட்சருக்கு ஆதரவு குறைகிறது

லண்டன், ஆக 5

பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தட்சரிலும் பார்க்க எதிர்க்கட்சித் தலைவர் நீல் கின்னொக் பிரிட்டிஷ் மக்கள் மத்தியில் மிகப்பிரபலம் பெற்று விளங்குகின்றார்.

கன்சர்வேட்டிவ் கட்சியிலும் பார்க்க தொழிற் கட்சி 11 புள்ளிகளால் முன்னணியில் உள்ளது.

'சண்டே ருடே' பத்திரிகை நடத்திய ஆய்வு ஒன்றில் இது வெளியானது. (உ-எ)

## நாடகங்களுக்கு அனுமதி

பீகிங், ஆக 5

1953 இல் இருந்து தடை செய்யப்பட்டுள்ள 80 சீன இசை நாடகங்களை மீண்டும் நடத்த சீன அரசு அனுமதி அளித்துள்ளது.

சீன பிரதி கலாசார அமைச்சர் இதனை அறிவித்ததாக 'சைனா டெய்லி' என்ற ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டது. (உ-எ)

## சிறை

மாஸ்கோ, ஆக. 5

ரஷ்யாவில் இருந்து மிகவும் அதிரானதாகக் கருதப்படும் வயலின் இசைக்கருவிகளை கடத்தியதற்காக அமெரிக்கப் பிரஜை ஒருவருக்கு மூன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (உ-எ)

## ரஷ்ய அறிவிப்புக்கு வரவேற்பு

பீகிங், ஆக. 5

சீனாவின் எல்லைப் பிரதேசத்தில் இருந்து சோவியத் துருப்புக்கள் வாபஸ் வாங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதை, மங்கோலியா வரவேற்றுள்ளது.

இப்படி நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது. (உ-எ)



### திருவாசகம்

குறள்:
இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள.

பொருள்:
'யான் வறியவன்' என்னும் துன்பச்சொல்லை ஒருவன் உரைப்பதற்கு முன் அவனுக்குக் கொடுக்கும் தன்மை நல்ல குடிப்பிறப்பு உடையவனிடம் உண்டு.

## விதை உருளைக்கிழங்கிற்கான வாகனச் செலவை மீளப் பெற வழி

### யாழ். செயலகம் அறிக்கை

1983/1984 ஆம் ஆண்டில் 1200 மெற்றிக் தொன் உள்நாட்டு விதை உருளைக்கிழங்கு யாழ் மாவட்ட உருளைக் கிழங்கு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

நுவரெலியாவில் இருந்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கமநலச் சேவை நிலையங்களும் தங்கள் ஆலனை ஒழுங்கு செய்யப்பட்ட வாகனங்கள் மூலம் வரவழைக்கப்பட்டன.

கொடுக்கப்பட்ட கிழங்கின் அளவு போதாது என்று விவசாயிகள் மேலும் கேட்டுக் கொண்டமையினால் யாழ் அரச அதிபர் திரு வை. மு. பஞ்சலிங்கம் எடுத்த பெரும் முயற்சியினால் மேலும் 200 மெற்றிக் தொன் இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கு புகையிரதம் மூலம் யாழ் மாவட்டத்திற்குத் தருவிக்கப்பட்டது.

இறக்குமதி செய்து விநியோகிக்கப்பட்ட 200 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கிற்கு வாகனச் செலவு இல்லாதிருந்தும், விவசாயிகளிடமிருந்து ஒரே அளவு பணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும், கமநலச் சேவை நிலையங்களிலும் வசூலிக்கப்பட்டன.

இதில் போக்குவரத்துச் செலவுக்கென அறவிடப்பட்ட பணம் அரச அதிபரின் வேண்டுகோளின்படி யாழ் செயலக வைப்பு நிதியில் வைக்கப்பட்டது.

1983/1984 ஆம் ஆண்டு பெருமழை வீழ்ச்சியினால் அவ்வாண்டு பயிரிடப்பட்ட உருளைக் கிழங்கு, வெங்காயம் முதலியன முற்றுச் சேதம் அடைந்ததில் சகல விவசாயிகளும் பெரும் நஷ்டம் அடைந்தனர்.

இதனால் 1983/1984 ஆம் ஆண்டில் உருளைக் கிழங்கை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமோ, கமநலச்சேவை நிலையங்கள் ஊடாகவோ பெற்ற விவசாயிகளுக்கு வைப்பு நிதியில் வைக்கப்பட்ட பணத்தை பகிர்ந்து அளிப்பதென யாழ் மாவட்ட விவசாய அபிவிருத்திக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய பின் வரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கீழ்வரும் தொகைப் பணம் மீளளிப்புச் செய்யப்பட்டது.

நல்லூர் - ரூ 17001:-
சுன்னாகம் - ரூ 30927:-
நீர்வேலி - ரூ 94344:-
அச்சுவேலி - ரூ 75340:-
தெல்லிப்பளை - ரூ. 10773:-

இம் மீளளிப்பு விதை உருளைக்கிழங்கு பெற்ற விவசாயியின் - அதாவது பெட்டிக்கணக்கு விதம் திருப்பு - பாரபட்சமின்றி பகிர்ந்தளிக்கப்படுமென பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அரச அதிபருக்கு உறுதியளித்துள்ளன. கொடுப்பனவுகளின் விவரம் அவைகளின் முதலில் விளம்பரப் பலகையில் வெளியிட்டு அதன் ஆட்சேபனைகளை விசாரித்துத் தீர்த்தபின் இம் மீளளிப்புப் பணத்தை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்படுதல் உசிதமாகும்.

எனவே 1983/1984 ஆம் ஆண்டில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் விதை உருளைக் கிழங்கு பெற்ற விவசாயிகள் தத்தமது ஆவணங்களுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்குரிய மீளளிப்பைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (உ-இ)

## வடக்கில் மேலும் மூன்று கொத்தணி அமைப்புகள்

### நெடுந்தீவு, வேலணை, உசன் பகுதிகளில்

யாழ்ப்பாணம், ஆக 6

யாழ். கல்வித் திணைக்களம் மேலும் மூன்று கொத்தணி அமைப்புக்களை பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்தியுள்ளது.

நெடுந்தீவு, உசன், வேலணை ஆகிய மூன்று பகுதிகளிலேயே இவை உருவாக்கப்பட்டிருக்கின்றன.

1982 ஆம் ஆண்டு புங்குடுதீவு கல்வி வட்டாரத்திலுள்ள 15 பாடசாலைகளை கொத்தணி அமைப்பின் கீழ் பரீட்சார்த்தமாக முதன் முறையாக கொண்டு வரப்பட்டது.

அதைத் தொடர்ந்து 1985 ஆம் ஆண்டில் கோப்பாய், (10 பாடசாலைகள்) வட்டுக்கோட்டை (15 பாடசாலைகள்), புலோலி (12 பாடசாலைகள்) ஆகிய 3 கொத்தணி அமைப்புக்கள் பரீட்சார்த்தமாக உருவாக்கப்பட்டன.

இந்தப் பரீட்சார்த்த அமைப்புக்கள் பெரும் பலன் தருபவையாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இதை அடுத்தே இந்த வருடம் மேலும் 3 கொத்தணி அமைப்புக்களை கல்வித் திணைக்களம் அறிமுகம் செய்துள்ளது.

புங்குடுதீவு கல்வி வட்டாரத்திலுள்ள 10 பாடசாலைகளை கொண்ட நெடுந்தீவு கொத்தணி அமைப்பும், வேலணை கல்வி வட்டாரத்திலுள்ள 11 பாடசாலைகளைக் கொண்ட வேலணை கொத்தணி அமைப்பும், சாவகச்சேரி கல்வி வட்டாரத்திலுள்ள 10 பாடசாலைகளைக் கொண்ட உசன் கொத்தணி அமைப்பும் செப்டெம்பர் மாதம் முதல் இயங்கத் தொடங்கும்.

நெடுந்தீவு மகாவித்தியாலயம், வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயம், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் என்பன இந்தக் கொத்தணி அமைப்புக்களின் பிரதம பாடசாலைகளாக இயங்கும். (உ-5)

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஆக 6

யாழ். செயலக திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. வி.எஸ் சுவாமிநாதன் கிளிநொச்சி செயலகத்திற்கு மாற்றம் பெற்றுள்ளார்.

இவரது இடத்திற்கு திட்டம் செயலாக்கும் அமைச்சில் கடமை புரிந்த திரு. எஸ். கோபாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-5)

## விளையாட்டுத் துறையிலும் மாணவர் முன்னேற வேண்டும்

முள்ளியவளை, ஆக 6

கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டுத் துறையிலும் மாணவர்கள் முன்னேற வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்ற முல்லைத்தீவு மகாவித்தியாலய வீரர்களைப் பாராட்டி நடந்த மதிய போசன விருந்துபசாரத்துக்கு தலைமை வகித்து பேசிய அதிபர் திரு எஸ். இராசேந்திரம் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், இம் மாவட்டத்தில் இவ் வித்தியாலயம் தொடர்ந்து விளையாட்டுத்துறையில் நல்ல முன்னேற்றத்தை அடைந்து வருவதற்கு இங்கு கடமையாற்றும் ஆசிரியர்கள், மாணவர்களின் ஒத்துழைப்புமே முக்கிய காரணம் என்றும் கூறினார். (இ)

### சமய சந்நிதிகளில்

## அம்பாள் உற்சவம்

யாழ்ப்பாணம், ஆக. 6

புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தான (சிவன் கோயில் - பருத்தித்துறை) அம்பாள் உற்சவம் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இரதோற்சவம் 7 ஆம் திகதி காலை 8-30 மணிக்கும், ஆடிப்பூர உற்சவமும், தீர்த்தோற்சவமும் 8 ஆம் திகதி முறையே காலை 8-30 மணிக்கும் காலை 10-30 மணிக்கும் நடைபெறும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று ரூ. 5/-
★ Processing Free
★ விற்பனை வர்ண புகைப்படச் சுருள்கள்
KODAK — Gold 100
FUJI — SAKURA
FORTE — TUDOR
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23628

# உதயன்

06–08–1986 புதன்கிழமை

வாடிக்கையாளர்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ணப் புகைப்படப் பிரதிகள்
★ கம்பியூட்டர் முறையில்
★ குறைந்த செலவில்
★ சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

## 2-வது சிரார்த்த தினம்

சட்டத்தரணி
விவேகானந்தன்
செல்வகுமார ஆனந்தன்
B.A., L.L.B.



ஆழியில் ஐக்கியமாகிய
ஆழிக்குமரன் ஆனந்தன்
மலர்வு: 25 5 43 · உதிர்வு 6 8 84

பதினெட்டாம் அகவையில் பாக்குநீரிணையைக் கடந்த பாராட்டுக்குரியவர். பின்னர் அதனை இரு தடவைகள் கடந்து இன்னோர் சாதனை புரிந்தவன்.

கால் ஒன்றில் நின்றும், களிநடம் தொடர்ந்து புரிந்தும், களைப்பின்றிப் பலதினம் நடந்தும், பன்னூறு மைல்கள் சைக்கிளில் கடந்தும், நீரிலே தவமாய்ப் போல் கிடந்தும், தலைக்குமேல் கால்வரை உதைந்தும், பில்லியட் கோலை விரலிடை கவ்வி தோள்வரை தொடர்ந்து கொணர்ந்தும், போல் பஞ்சிங் புரிந்தும் உலக சாதனைப் பொன்னேட்டில் பொன்னெழுத்தில் தன் பேரைப் பலமுறை பொறித்து தாயாம் தமிழின் பெருமையைத் தரணி அறியத் தந்தவன்..

சாதனைக்கே பிறந்து சாதனைக்காய் வாழ்ந்து ஆழிஇலக் கால்வாயில் சாதனைப் பணியில் சாய்ந்த ஆனந்தன் நாமம் வாழி!

— குடும்பத்தினரும், நண்பர்களும் —

## ஓராண்டு நினைவு அஞ்சலி



செ. சிவஞானசுந்தரம்பிள்ளை
(அனுராதபுரம் 'நியூ விஜேந்திரா' தியேட்டர் உரிமையாளர்)

தோற்றம்: 23-03-1925 மறைவு: 18-07-1985

அன்பின் திருவுருவாய் குடும்பத்தின் ஒளிவிளக்காக எங்கள் இதய கோயிலில் இருக்கும் உங்கள் நினைவு ஓராண்டு கழிந்தாலும் ஒரு கோடி பூசை மலர்கள் தினம் தினம் உங்கள் ஆத்மாவிற்கு அர்ச்சனையாகும்.

இங்ஙனம்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

'வசந்தமாளிகை',
ஐயனார் கோயில் வீதி, K.K.S. Road, சுன்னாகம்

# தமிழீழ எல்லைகளை நிர்ணயிக்க மட்டுமே இனிப் பேச்சுவார்த்தை

## பிரபா பேட்டி

நியூயோர்க், ஆக. 5

● தனித் தமிழீழத்துக்கு எல்லை நிர்ணயிக்க மட்டுமே இனிப் பேச்சுவார்த்தை

● 51 ஆயிரம் பேர் கொண்ட இலங்கை ஆயுதப்படையை எதிர்கொள்ளும் பலம் பொருந்தியவர்கள் நாம். நீண்ட போருக்கு நாம் ஆயத்தம்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் அமெரிக்காவின் பிரபல சஞ்சிகையான 'நியூஸ்வீக்'குக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பேட்டியில் திரு. பிரபாகரன் மேலும் கூறியிருப்பதாவது;

இனக் கொலைக்கு ஆளாகியுள்ள தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் நாம் என்பதை அமெரிக்க மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

இதுவே அமெரிக்கர்களுக்கு நாம் விடுக்கும் வேண்டுகோள்.

இலங்கை அரசுக்கு உதவி செய்வதை அமெரிக்க அரசாங்கம் நிறுத்த வேண்டும். அந்த உதவிகளை இலங்கை அரசு எமது மக்களை அழிக்கவே பயன்படுத்துகின்றது.

இலங்கை அரசின் அண்மைக்கால யோசனைகள் உலகை ஏமாற்றவே பயன்படுத்தப்படுகின்றன.

தமிழீழ மக்களுக்கான எல்லைகளை நிர்ணயிப்பதே இன்று பேச்சுவார்த்தைக்குரிய தலைப்பு.

அரசியல் அகதிகள் என்ற முறையில் தங்குவதற்கு இந்தியா தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடமளித்துள்ளது. காலக்கிரமத்தில் எம்மை அங்கீகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்தியாவுக்கு ஏற்படும்.

தனது தலைமையின் கீழ் எவ்வளவு போராளிகள் செயற்படுகிறார்கள் என்பதைச் சொல்ல மறுத்த திரு. பிரபாகரன் தொடர்ந்து சொன்னதாவது;

நீண்ட கால கெரில்லா யுத்தத்தை நடத்தக் கூடிய அளவுக்கு படைபலம் எம்மிடம் இருக்கிறது.

எனது போராட்ட அனுபவம் நாளுக்கு வளர்ந்துக் கொண்டது.

இயற்கை கூர்மையுடன் கிளின்ட் ஈஸ்ட்வூட் நடித்த மேற்கு நாட்டுப் படங்கள், யுத்தப் படங்கள் ஆகியவையே எனது யுத்த அனுபவத்தை வளர்த்துவிட்டன.

இயூபாவில் நான் பயிற்சி பெற்றிருந்தால் நான் இன்னும் சிறந்த போராளியாக வந்திருப்பேன்—

— இப்படி திரு பிரபாகரன் 'நியூஸ்வீக்' பேட்டியில் தெரிவித்தார்

(உ-எ)

## உடனடியான..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

க் கூட்டணி, இலங்கை அரசு முன் வைக்கும் என்றும் தெரிகிறது.

அதிகாரப் பகிர்வுக்கு உரிய விஷயங்கள் குறித்து முன்னேற்றம் எதுவும் காணும் முன்னர் பிரச்சினைக்குரிய தமிழ்மொழிப் பிராந்தியம், இணைப்பு ஆகியவற்றை வற்புறுத்துவது பேச்சுக்களுக்குத் தடைக்கல்லாக மாறிவிடும்.

இக்கட்டத்தில் பிரச்சினைக்குரிய இக்கோரிக்கையை முன்வைக்க வேண்டாம்-

இந்தச் சாரப்பட இந்திய அதிகாரிகள் கூட்டணியினருக்கு ஆலோசனை கூறியுள்ளனர் என்று அறியவந்தது.

(ஆ-எ-21)

## தங்களுக்குள்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முகாமை நோக்கி வாழைச்சேனை பொலிஸாரும் இராணுவத்தினரும் சென்று கொண்டு இருந்தனர்.

இதேவேளை இரவு 7 மணியளவில் வாழைச்சேனை பெட்ரோல் நிலையச் சந்தியில் பொலிஸ் அதிரடிப் படையினர் காவலில் நின்றிருந்தனர்.

கூட்டுப்படையினர் வரும் வாகனங்களை இவர்கள் மறித்தனர். வாகனங்களில் இருந்தவர்கள் தாங்களும் படையினர் என்று குரல் எழுப்பினராம்.

ஆனால் காவலில் நின்ற அதிரடிப்படையினர் சுடத் தொடங்கினார்கள்.

திருப்பிக் கூட்டுப்படையினரும் சுட்டனர்.

இல் லக்ஷ்மன் என்ற பிசார்ஜ் பொலிஸ் கான்ஸ்டபிள் மரணமானார். 3 பொலிஸாரும் காயமடைந்தனர். (உ-எ-21)

## நகரில்....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்ட கடைகளின் இரும்புக் கதவுகள் குண்டுச் சிதறல்களினால் கிழிக்கப்பட்டுள்ளன.

வீதியின் நடுவே பல குழிகள் ஏற்பட்டன.

யாழ்ப்பாணம் ஹரன் தியேட்டர் அருகாமையில் விழுந்து வெடித்த ஷெல் குண்டுகளினால் ஒரு வீடு தீப்பற்றி எரிந்தது. பல வீடுகள் சேதமடைந்தன.

இதனால் இப்பகுதியில் இருந்த பொதுமக்கள் இரவோடிரவாக வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

யாழ் நாற் சந்தோரும், யாழ்-ஆஸ்பத்திரியும் "ஷெல்" குண்டு வெடிப்பு சிதறல்களினால் சேதமடைந்துள்ளன

ஷெல் தாக்குதலின் எதிரொலியாக, யாழ் ஆஸ்பத்திரி 24ஆம் வார்ட்டிலுள்ள ஜன்னல் கண்ணாடியும் உடைந்துள்ளது.

யாழ் அசோக் ஹோட்டலில் உள்ள குளிரூட்டி சாதனம் ஒன்றும் சேதமடைந்தது.

நேற்றைய தாக்குதலில் சேதமடைந்த கட்டடங்கள், பொருள்களின் பெறுமதி பதினைந்து இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக இருக்கலாம் எனவும் மதிப்பிடப்படுகிறது. (உ-10)

## 300 தமிழர் நேற்றுக் கைது

கொழும்பு, ஆக 6

நேற்று அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மற்றும் தமிழ்ப்பகுதிகளில் நடத்தப்பட்ட தேடுதலில் 300க்கு அதிகமான தமிழர்கள் ஆயுதப் படையினரால் விசாரணைக்காக கைது செய்யப்பட்டனர்

கொழும்பு தமிழ்த்தினசரி ஒன்றின் அம்பாறை மாவட்டச் செய்தியாளரும் கைதானவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## 11 பேர் பலி

டோக்கியோ. ஆக 5

ஜப்பானில் வீசிய புயலினால் 11 பேர் மாண்டனர். 4 பேர் காயமடைந்தனர். (உ)

## படகில்வந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தவர்களில் பலர் உயிரிழந்தனர்.

இவர்களின் படகுகளும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியது.

இத் தாக்குதலின் போது எமது தரப்பில் எதுவிதமான இழப்புகளும் இல்லை.

—இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## திட்டம் தவிடு பொடி

கொழும்பு, ஆக 6

கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த காடு வளர்ப்புத் திட்டம் தீவிரவாத நடவடிக்கை காரணமாக சீர்குலைந்துள்ளதாம்.

திட்டமிடப்பட்ட 2,100 ஏக்கருக்குப் பதிலாக ஆக 270 ஏக்கரில் மட்டுமே புதிதாக காடு வளர்ப்பு வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. (உ-எ)

## முகாம்களில்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிபார்சுகள் அங்கு நீண்ட நேரம் ஆராயப்பட்டன.

முகாம்களுக்கு அருகே உள்ள மக்களை வெளியேற்றுவதா அல்லது முகாம்களுக்கு அருகில் உள்ள கட்டடங்கள் சிலவற்றை பயன்படுத்துவதா என்பது குறித்தும் ஆராயப்பட்டதாம்

பிரஸ்தாப மாநாட்டிற்கு வெளிநாட்டு நிபுணர்கள் சிலரும் அழைக்கப்பட்டு அவர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது

சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சுகள் சில குறித்து தீர்க்கமாக ஆராயப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டதாகவும் அறிய வருகிறது. (ஆ-6)

## வர்த்தக..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மறுபுறம் மக்கள் பற்றாக்குறை பட்டினியால் வாடும் சூழ்நிலை உருவாகும்.

இவ்விஷயத்தை உரியவர்களிடம் அறிவித்து இப்பாதிப்புகள் மேலும் தொடராவண்ணம் தகுந்த நடவடிக்கை எடுத்து வர்த்தக நிலையங்களுக்குப் பூரண பாதுகாப்புக் கிடைக்க ஒழுங்கு செய்யுங்கள்.

இப்படி அந்த மகஜரில் யாழ் வர்த்தகர் சங்கம், அரச அதிபரைக் கேட்டுள்ளது. (உ-எ)

## ட்ரக்தடம்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ட்ரக்கில் படையினர் ஏற்றி கொண்டு சென்றார்கள்.

நாவலூச் சந்திக்கு அருகில் வைத்து ட்ரக் தடம் புரண்டது

காயமடைந்த சிப்பாய்கள் இராணுவ முகாமில் இருந்து ஹெலிகொப்டர் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் (உ-எ-21)

## இராணுவ ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தம் ஒன்றைக் கண்காணிக்க ஐ. நா. சமாதானப் படையை அனுப்பவேண்டும் என்று கோரும் யோசனை ஏற்போதைக்கு இந்தியாவிடம் இல்லை.

அப்படி ஐ. நா. சமாதானப் படையை அனுப்புவதற்கு ஐ. நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கு உறுப்பு நாடுகள் வாக்களிக்க வேண்டும்.

இனப் பிரச்சினையை சர்வதேசமயப்படுத்தும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை.

அமெரிக்க யுத்தக் கப்பல்கள் கொழும்புக்குச் சென்றன. அவை நல்லெண்ண விஜயங்கள் என்று எமக்குத் தெரிவிக்கப்பட்டது எப்படி இருந்தும் எமது கரையோரப் பகுதிகளில் ஊடுருவல்களை தடுப்பதில் நாம் அக்கறை கொண்டுள்ளோம்.

இலங்கை அரசாங்கம், பாகிஸ்தான், தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து பெறும் ஆயுதங்களில் பெரும்பாலானவை அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்டவை என்பது இந்திய அரசுக்குத் தெரியும்.

இனப் பிரச்சினைத் தீர்வுக்குக் காலக்கெடு விதிப்பது சிரமமான காரியம்.

இப்படி இணை அமைச்சர் தெரிவித்தார்.

ஆலடி அருணா, எம். எஸ். குருபாதசுவாமி, விஜயமோகன ரெட்டி, ஜஸ்வந்சிங் ஆகிய உறுப்பினர்கள் இனப்பிரச்சினை சம்பந்தமாக பல கேள்விகளை எழுப்பினர். (உ-எ)

இலங்கைப் பல்கலைக் கழகங்களின்

# வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்

கல்வியாண்டு 1987 | 88

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி
வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள்
செப்டம்பர் மாதம் 7ஆம் திகதி (07-09-1986) ஆரம்பமாகின்றன

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

கலைமாணி (B.A.), விஞ்ஞானமாணி (B.Sc.) (கணிதம்), வர்த்தகமாணி (B.Com.), சட்டமாணி (LL.B.)

- 3 வருடங்களில் B.A., B.Sc. பட்டதாரியாகலாம்.
- 4 வருடங்களில் B.Com, LL.B. பட்டதாரியாகலாம். (பட்டதாரிகளானதும் உடனடி வேலை வாய்ப்புகள்)
- மாணவர்களின் நலன் கருதி 3 மாத இலவச ஆங்கில வகுப்புகள்.

விண்ணப்பங்கள் ஒகஸ்ட் 30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும், விபரத்திரட்டினையும் பெற "பதிவாளர், அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்" என்ற பெயருக்கு ரூபா 10இற்கான காசுக் கட்டளையுடன் 9" x 4" அளவுடைய சுய முகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்

ASTAN INSTITUTE

166|1, Hospital Road,
JAFFNA.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம், 1ஆம் மாடி.)

Branch: 101|1, Stanley Road,
JAFFNA
(மக்கள் வங்கிக்கருகாமையில்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலையவீதி, இரண்டாம் ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 06—08—1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ60 N 86.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org